# கற்பகம்
திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்–05 ஒக்ரோபர்–2012 இதழ்–60


## குறளமுதம்–60

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்–6 அறத்துப்பால் வாழ்க்கைத்துணை**

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

மனைவியின் நற்குண நற்செய்கைச் சிறப்பே இல்லறத்துக்கு மங்கலமாகும். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலமாகும் என்று அறிந்தோர் கூறுவர்.

### ★ வடமாகாண பனை தென்னை வள அபி.கூ.ச.சமாசம் ★

# கைதடி நவீல்ட் பாடசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு!



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கைதடியில் அமைந்துள்ள நவீல்ட் பாடசாலை மாணவர்களின் தேவை கருதி சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களை பாடசாலை அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

கடந்த மாதம் 26ம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொண்டார்.

(7ம் பக்கம் பார்க்க)

## 90வது சர்வதேச கூட்டுறவுதினமும் 40வது ஆண்டு நிறைவு விழாவும்



கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 08-10-2012 திங்கட்கிழமை 40வது ஆண்டு நிறைவையும், 90வது சர்வதேச கூட்டுறவு தின விழாவையும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது.

சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் திரு செ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு நா.கணேசன், யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் (7ம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கியின் பிரதிநிதிகள் அச்சுவேலி சங்கத்துக்கு விஜயம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களினால் உற்பத்தி செய்யப்படும் சாற்று உற்பத்திகளை நவீன முறையில் தகரப் பேணிகளில் அடைத்து தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்புவது தொடர்பாக ஆராய்வதற்கென இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண பிரமுகர்கள் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஏற்பாட்டுக்கமைய அச்சுவேலி பனை தென்னை வள

(7ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் சங்கத்தில் 40வது ஆண்டு நிறைவு விழா

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இம் மாதம் 15ம் திகதி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஓய்வு பெற்ற பணியாளர்கள், அங்கத்தவர்கள், சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரை கௌரவித்து பரிசில் வழங்கும் விழா அண்மையில் சங்கத் தலைவர் திரு மு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

**சிந்தனைத்துளி**

" 'ஒற்றுமை' என்பதில் நாம் வெற்றிகாணாத போது, 'வேற்றுமை' என்பது எம்மை வெற்றி கொள்கிறது" —அறிஞர்—

# கற்பகக்கரு

## கூட்டுறவாளர்தினம்!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 40வது ஆண்டு நிறைவு விழாவை பல்வேறு சங்கங்கள் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றன.

இந்நிகழ்வுகளில் சங்கங்கள் தமது அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு முக்கியத்துவமளித்து அவர்களது தன்னலமற்ற சேவைகளைப் பாராட்டி கௌரவித்து வருகின்றன.

இந்நடைமுறை உண்மையில் கூட்டுறவு இயக்கத்தின் புனிதமான பணிக்கு முக்கியமளித்து வருவதையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் தங்களது கூட்டுவின்பால் உள்ள அக்கறையை வெளிக்காட்டுவதற்கு இத்தகைய கௌரவங்களும் பாராட்டுதல்களும் இன்றியமையாத ஒன்றாகும்.

மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருதிக் கூட்டுறவுச் சங்கங்களில் முன்னுதாரணமாக சுன்னாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், கோண்டாவில், காரைநகர் ஆகிய சங்கங்கள் 40வது ஆண்டு நிறைவினை சிறப்பாக அனுஷ்டித்து 40 ஆண்டுகள் தமது சேவையை பூர்த்தி செய்த அங்கத்தவர்களையும் பணியாளர்களையும் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

இச்சங்கங்களின் இம்முன்னுதாரணத்தை ஏனைய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் பின்பற்றி, தத்தமது சங்க அங்கத்தவர்களையும் பணியாளர்களையும் பாராட்டி கௌரவிக்க வேண்டிய கடப்பாடு உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

சங்க அங்கத்தவர்களின் கடின உழைப்பின் மூலம் பெறப்பட்ட இலாப நிதியினை அவர்களுக்கே பகிர்ந்தளிப்பது இச்சங்கங்களின் தலையாய கடமையாக இருந்துவருகிறது. அங்கத்தவர்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கு எத்தனையோ விதமான அளப்பரிய சேவையை இச்சங்கங்கள் செய்து வருவதை பாராட்டாமலும் இருக்கமுடியாது.

40 ஆண்டுகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்த இச்சங்கங்கள், தமது சமாசம் ஊடாக 40 ஆண்டு சேவைகளை நினைவுகூர்ந்து முத்திரை பதிக்கக்கூடிய வகையில் ஆண்டு மலர் ஒன்றினையும் வெளியிட நடவடிக்கை எடுத்து வருவது இச்சங்கங்களின் வளர்ச்சிப் பாதையின் முக்கியமான ஒரு மைல் கல்லாகும்.

40 ஆண்டுகளை தமது சேவையின்மூலம் பூர்த்திசெய்த அங்கத்தவர்களினதும் பணியாளர்களினதும் நிழற்படங்களை இம்மலரில் பதித்து வெளியீடு செய்வதற்கு தீர்மானித்திருப்பதானது இம்மலரானது அங்கத்தவர்களினதும் பணியாளர்களினதும் சேவைகளை பிரதிபலிக்கும் ஒரு ஆவணமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து முதல் பத்து ஆண்டுகள் பூர்த்தியில் ஒரு மலரினையும், பின்னர் 25 ஆண்டின் நிறைவில் வெள்ளிவிழா மலரினையும் வெளியிட்டிருந்தது. தற்பொழுது 40வது ஆண்டு சிறப்பு மலரினையும் வெளியிடுவதற்கு சமாசம் நடவடிக்கை எடுத்து வருவது இச்சங்கங்களுக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் 90வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை கொண்டாடுகின்ற சமாசமானது, 40வது ஆண்டு சிறப்பு மலரினையும் நிறைவான வகையில் வெளியீடு செய்வதற்கு கற்பகம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" — ஆசிரியர்

# இலங்கையின் நீதிமன்ற அமைப்பு

## வரலாறு சார்ந்த அபிவிருத்தி 7

2. உள்ளூராட்சி நிறுவனங்களின் துணைச் சட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அவற்றின் வருமானங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விடயங்கள்.

3. காணிப் பிணக்குகள் தொடர்பான குற்றங்கள் அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகை தொடர்பான முழுவதும் ஒத்த ஆரம்ப குற்றவியல் நீதிமன்ற அதிகாரம் ஆரம்ப நீதிமன்றத்தினால் செயற்படுத்தப்படுகிறது. எடுத்துக்கொண்ட விடயம் 1,500 ரூபாவுக்கு குறைவாக இருந்தபோதிலும் அரசாங்கக் கட்டளையின் பிரகாரம் ஆற்றப்படுகின்ற செயல்களுக்கு எதிராக அல்லது நீதிமன்ற ஒழுங்கமைப்பு சட்டத்தின் 4ம் அட்டவணையின் கீழ் எடுக்கப்படும் ஏதாவது காரணம் தொடர்பாக ஆரம்ப நீதிமன்றத்துக்கு விசாரணை நடத்த முடியாது.

**முக்கியமானது:** தீவின் பல நீதிமன்ற வலயங்களில் ஆரம்ப நீதிமன்றங்கள் செயற்படுத்தப்படாததுடன், அந்த அதிகாரங்கள் நீதிவான் நீதிமன்றங்களினால் செயற்படுத்தப்படுகின்றன. ஆரம்ப நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படவேண்டிய வழக்குகள் அன்றைய வழக்கத்தின்படி 'அறுபத்தாறின் வழக்குகள்' என அழைக்கப்படும்.

அடுத்து, இப்பொழுது எங்கள் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றம் அற்ற, மாற்று உபாய முறைகள் பலவற்றை எடுத்து சீர்தூக்கிப் பார்ப்போம்.

### 07. தொழில் நியாய சபை – Labour Tribunal

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் முன்னுரிமைச் சாதகமாக இருப்பது ''தொழில் சார்ந்த சமாதானம்'' அதாவது தொழில்தருனர், தொழில்பெறுபவர் ஆகிய இரு தரப்பினர்களுக்கிடையில் நிலவும் விளக்கம் மற்றும் நம்பிக்கையின்மீது அடிப்படையாகக் கொண்ட ஒத்துழைப்பேயாகும். இது முறையாகச் செயற்படாதவிடத்து, வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுவான தாக்கத்தை உண்டுபண்ணுவதுடன், புதிய முதலீட்டாளர்களுக்கும் ஊக்கமளிக்கப்படுவதில்லை. ஆனால் சம்பிரதாய நீதிமன்றங்களினால் தொழில் பிணக்குகளுக்குத் தீர்ப்பளிக்கும்பொழுது கீழ்க்காணும் பிரச்சினைகள் தோன்றுகின்றதென ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டிருந்த காலத்திலிருந்தே இந்நாட்டு சட்டத்தை தயாரிப்பவர்களினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

01. தொழில் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கு எடுக்கும் காலம் அதிகமாகும்பொழுது, நேரடியாக அது நாட்டின் பொருளாதாரத்துக்கு தாக்கத்தை உண்டுபண்ணுகிறது.

02. தொகுதிவாரியான நீதிமன்ற நடைமுறைகள் காரணமாக சாதாரண தொழிலாளர்கள் தொல்லைகளுக்கு உட்படுகிறார்கள்.

03. சம்பிரதாயபூர்வ நீதிமன்றங்கள் சட்டம் சார்ந்த அடிப்படையின்மீது கட்டுப்பட்டு நடப்பதினால், சேவையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கன்றி சட்டம் சார்ந்த ஏற்பாடுகள் மாத்திரம் சீர்தூக்கிப் பார்த்து வழக்குகளின் தீர்ப்புக்கள் வழங்கப்படும்பொழுது நியாயமற்றவைகளுக்கு உட்படும் தொழிலாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுதல்.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக பாராளுமன்றத்தினால் 1950ஆம் ஆண்டு 43ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டம் 1957ம் ஆண்டு 62ம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டதுடன், 'தொழில் நியாய சபை' எனும் சபையும் அறிமுகம் செய்யப்பட்டது. தொழில்தருனர், தொழில்பெறுனர் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும்பெறும் முறைப்பாடுகள் பற்றி விசாரணை நடத்தி, நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமாகிய கட்டளையை வழங்குவதை தொழில் நியாய சபையிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் தொழில் நியாயசபையிடம் இருந்து நிவாரணம் அல்லது உதவியைக் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்துக்கொள்ள முடியும்.

—வளரும்—

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையும் எதிர்கால இலக்கும்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 90வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு அதன் உறுப்புரிமைச் சங்கங்களின் பணியாளர்களுக்கு இடையில் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பிடித்த கோண்டாவில் சங்கப் பணியாளரான திரு தே.தவராசாவின் கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

பனந்தொழில் வல்லுனர்களின் உழைப்பு சுரண்டப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு, சமூக, கல்வி, பொருளாதார அந்தஸ்துகள் பறிக்கப்பட்டு, பெரும் அவல நிலைக்குள்ளாகி இருந்த வேளையில், இவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு என்பவற்றை கருத்தில்கொண்டு 1972களில் உருவாக்கம்பெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அன்று முதல் இன்றுவரை ஒரு கட்டுக்கோப்பான நிறுவனமாக கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாக படிப்படியான ஒரு பரிணாம வளர்ச்சியினைப் பெற்று, இன்று தன்னையும் தன்சார்ந்த அங்கத்துவங்களையும் ஒரு ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவந்து, தமக்கான தேவைகளில் பெரும் பகுதியை தாமே நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சுயநிர்ணய நிறைவேற்றுப் பொறிமுறைகைளைக்கொண்டு தனித்துவம்பெற்ற ஒரு மாபெரும் நிறுவனமாக மாறி இருக்கிறது அல்லது திகழ்ந்து கொண்டிருக்கிறது எனத் துணிந்து கூறலாம்.

இவ்வாறான திருப்தி தரக்கூடிய ஓர் உன்னத நிலையை அடைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உலகின் நவீன தொழில்நுட்ப மாற்றத்தின் வேகப்பாட்டாலும் போட்டிப் பொருளாதார முறைமையாலும் இவைகளுக்கு ஈடுகொடுத்து நின்று நிலைப்பதில் அல்லது தொடர்ந்து செயற்படுவதில் மிகப் பெரிய சவால்களை எதிர்நோக்கி, அதற்கு முகம்கொடுத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்துடன் இன்று இருக்கின்றன என்பது வருத்தமளிக்கக்கூடிய ஒரு விடயமாகும்.

அந்த வகையில், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது செயற்பாடுகளை;உற்பத்தி சார்ந்த தொழிற்பாடுகளை மாற்றியமைக்கவேண்டிய அல்லது வீச்சாக்கிக் கொள்ளவேண்டிய தேவைப்பாடும் அதிகரித்துள்ளது. கூட்டுறவின் ஏனைய நிறுவனங்களைக் காட்டிலும் அதன் அங்கத்துவங்களுடன் நேரடித் தொடர்பினைக் கொண்டுள்ள சிறப்பியல்பினைப் பெற்றுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களானது, தமது எதிர்கால இலக்கினை மிகச் சரியாகக் கணித்துக்கொண்டு அந்த இலக்கினை நோக்கியதான தனது பயணத்தை அல்லது முன்னகர்வினை விரைவாக மேற்கொள்ளவேண்டிய கட்டாய தேவையும் எழுந்துள்ளது.

போரின்போது படைபலத் தேவைக்காகவும், போருக்குப் பிந்திய தற்போதைய காலத்தில் புதிய புதிய அமைப்புத் தேவைக்காகவும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலோபாய உற்பத்திப் பொருளான பனை மற்றும் தென்னை மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுவிட்ட;அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில், மீள் எழுச்சி மரநடுகைத் திட்டம் ஒன்றினை ஆரம்பித்து இலட்சக்கணக்கான பனை, தென்னை மரங்களை நட்டு வளர்த்து வளத்தை அதிகரித்துக் கொள்வதை எதிர்கால இலக்கினுள் முதன்மைப்படுத்திக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

அடுத்ததாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திசார் பொருட்களுள் முதன்மைபெறும் கள்ளு உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைவடைந்து, மெலிவடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே இருக்கின்ற தொழில் வல்லுனர்களையாவது வெளியேறாது தடுத்து நிறுத்தி அவர்களுக்கான தொழில் பாதுகாப்பு, இழப்பீட்டுக்கான காப்பீடு போன்றவற்றையும் அதிகரித்து, நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி, அல்லது விருத்திசெய்து குறைந்த வளங்களுடன் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளை மேற்கொள்வதை தமது எதிர்கால இலக்காக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வரித்துக் கொள்ளுதல் வேண்டும். அது மட்டுமன்றி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வருவாயை நிர்ணயிக்கின்ற, தீர்மானிக்கின்ற முதன்மைக் காரணியாக கிளை நிலையங்கள் காணப்படுவதால், தற்போதைய கிளை நிலைய முறைமைகள் முற்றாக மாற்றம் செய்யப்பட்டு, தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்ட நவீன கிளை நிலையங்களாக மாற்றியமைப்பதை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது எதிர்கால இலக்காக வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமூகத்தின் மீதான அக்கறை அபிவிருத்தி நோக்கிய பயணம் என்பவற்றையும் மேன்மைப்படுத்துவதை எதிர்கால இலக்காகக் கொள்ளுதல் வேண்டும். சமூக நலத்திட்டங்கள், கல்வியூட்டல், பயிற்சி வழங்கல், தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், சேமிப்பினை ஊக்குவித்தல், சுயதொழில் வாய்ப்புக்கான ஏதுநிலையை உண்டுபண்ணுதல் என சமூகத்தின் மீதான அக்கறையை விருத்தி செய்வதும் எதிர்கால இலக்காக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(7ம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகளின் நிழல்கள்

**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் 90வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழா நிகழ்வுகளின் பதிவுகள்**



















# நிகழ்வுகளின் நிழல்கள்










வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அண்மையில் கைதடியில் அமைந்துள்ள நவீல்ட் பாடசாலையின் மாணவர்களின் பயன்பாட்டுக்கென சுமார் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான ஒரு தொகுதி சமையல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியது. இந்நிகழ்வில் நவீல்ட் பாடசாலையின் அதிபர் உரையாற்றுவதையும், சமாசத் தலைவர் திரு ந.கணேசன் அவர்கள் மாணவர்களுக்கு பிஸ்கட் பொதியை வழங்குவதையும், மாணவர்களின் கராத்தே செயல்முறையையும் மற்றும் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.





சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் கைதடி மின்னொளி முன்பள்ளியில் சிறார்களுக்கான கல்விக் கண்காட்சி ஒன்று அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இங்கே பதிவாகியுள்ளன.

## சர்வதேச கூட்டுறவு தின விழாவும் ஸ்தாபகர்கள் நினைவுகூரலும்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி எதிர்வரும் 31ம் திகதி 90வது சர்வதேச கூட்டுறவுதின விழாவையும், கொத்தணி உருவாக்கத்துக்காக பாடுபட்டு அமரத்துவமடைந்த திரு சு.நடேசு, திரு க.சந்திரராசா ஆகியோரின் நினைவுகூரலையும் கொத்தணியின் தலைவர் திரு செ.செல்வராசா தலைமையில் நடத்தவுள்ளது.

இவ்விழாவில் சிறந்த அங்கத்தவர்கள், சிறந்த பணியாளர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற, உயர் கல்வி வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் ஆகியோருக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒற்றுமையே உயர்ச்சி தரும்

வள்ளுவனார் தந்த குறள் வகையாகச் சொல்லிவைத்த
கற்பக தருவதன் பெருமைகள் அனைத்துமிங்கு
காத்திரமாகவே நிலைத்திங்கு சேவை செய்ய
கூடடுறவுச் சங்கமதில் ஒற்றுமையே உயர்ச்சிதரும்

கண்ணோடு கருணைமிக்க பெருந்தலைமை
பண்போடு பணியாளர் பரவையிலே
பன்னலமும் சேர்த்து வைக்கும் பெருநிதியம்
பாங்காக சேவைசெய்யும் கூட்டுறவு
விண்ணுயர வளர்ந்து நிற்க ஒற்றுமையே உயர்ச்சிதரும்

வங்கிச் சேவைதனை வளமாக மாற்றிடவே
கிராமிய வங்கிதனை உருவாக்க நின்றிங்கு
சேம நிதிக் கணக்கென்றும் நிலையான வைப்பென்றும்
மகளிர் கணக்கென்றும் மழலைக் கணக்கென்றும்
சுயமுற்சிக் கடனென்றும் விவசாயக் கடனென்றும்
பலவகைத் திட்டங்கள் பாங்காக உருவாக்கி
சேவைசெய்யும் கூட்டுறவில் ஒற்றுமையே உயர்ச்சிதரும்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
நாட்டமுடன் சொல்லி வைத்த நம்மவர் செயலதுவால்
தேட்டம் பல கண்டுவிட்டோம் சேவை பல செய்துவிட்டோம்
கோட்டம் பல தாண்டி மாவட்டமாயிணைந்தோம்
நாமிங்கு வளர்ந்து விட்டோம் நல்லறிவை பெற்றுவிட்டோம்
கூட்டுறவால் நாட்டுறவை வளம்படுத்த
தேசியமாய் இணைந்து சேவைசெய்தோம்
படிமுறைகள் பல வகுத்து செய்யும் சேவை
பனை தென்னை வளம் காக்கும் கூட்டுறவில்
ஒற்றுமையே உயர்ச்சிதரும்

நாற்றிசையும் வீசுபுகழ் கூட்டுறவில்
அலுப்பென்று வந்தவர்க்கு மருந்துதரும்
பனை தென்னை வளம் சேர்ந்த கூட்டுறவு சங்கமது
நிலைத்து நிற்க ஒற்றுமையே உயர்ச்சிதரும்

முன்பள்ளி தான் அமைத்து கல்விக்கு ஒளி கொடுத்து
முன்மாதிரியாய் திகழும் பனை தென்னை கூட்டுறவு
முற்போக்கு சிந்தனையால் நலத்திட்டம் பல வகுத்து
முறையாக சேவல செய்ய ஒற்றுமையே உயர்ச்சிதரும்

வளம் பெருக்க வந்து நின்று பனை வெல்லம் பனங்கட்டி
புழுக்கொடியல் ஒடியல் எனப் பல மருந்தாகும் கற்கண்டும்
உருவாக்கும் செயலதுவும் உயர்ந்தோங்க வேண்டுமெனில்
ஒற்றுமையே உயர்ச்சிதரும்

கணினி சேவைக்கும் தொடர்பாடல் முறைமைக்கும்
சந்தைப்படுத்தலுக்கும் தரக்கட்டுப்பாட்டுக்கும்
காட்சிப்படுத்தலுக்கும் களஞ்சியப்படுத்தலக்கும்
தீர்மானம் எடுப்பதற்கும் சிறப்பாய் செயற்படவும்
பனை தென்னை கூட்டுறவில் ஒற்றுமையே உயர்ச்சிதரும்

காலத்தால் அழியாத கற்பகதருவிங்கே
ஞாலத்தில் நிலைத்திட நம்மவர் வாழ்ந்திட
சாலத்தே சிறந்திட்ட ஒற்றுமையே தான் என்றும்
உயர்ச்சிகள் தந்திடும் உணர்வாய்.

அச்சுவேலி வல்லைவாசன்

## மனித நேயம்

ஆறு அறிவு தான் பெற்ற
அற்புதப் படைப்பான மானிடனே!
பாசம் என்னும் வலை விரித்து
பாரில் உள்ளோர் யாவரையும்
நேசக் கரம்கொண்டு
நிஜமாக அணைத்துவிடு

## குழி பறிக்கும் குப்பைகள்

ஈரமில்லா நெஞ்சினோர்கள்
இடையூறுதான் விளைப்பர்
நேசமில்லா நெஞ்சினோர்கள்
வஞ்சனையைத்தான் விளைப்பர்
வேந்த புண்ணில் வேல்பாய்ச்சும்
பாசமில்லாப் பாதகர்கள்
பார்த்திருந்து குழி பறிப்பர்

இ.காந்தன்-கோப்பாய்

## மனிதனே மனிதனாகு

மனிதா நீ கல்வி கற்றவன்
எனும்அகந்தையா?
உன் அகந்தைக்கு ஓர்
முற்றுப்புள்ளி வை.
நீ கற்றது கை மண் அளவு
கல்லாதது உலகளவு
உனக்கு இது புரியவில்லையா?
புரிந்தும் நடிக்கின்றாயா?
நீ மனிதனாக வாழ
பிற ஜீவனிடமிருந்தும்
இயற்கையிடமிருந்தும்
கற்றுக்கொள்!
நாயிடமிருந்து நன்றியையும்
காகத்திடமிருந்துஒற்றுமையையும்
யானையிடமிருந்து
ஞாபகத் திறனையும்
பருந்திடமிருந்து கூர்மையான
பார்வையையும்
எறும்பு, தேனீக்களிடமிருந்து
சேமிப்பையும்
கடல் அலையிடமிருந்து
அயராத உழைப்பையும்
பூமியிடமிருந்து பொறுமையையும்
கற்றுக்கொள் -ஆனால்
நரியிடமிருந்து தந்திரத்தையும்
குயிலிடமிருந்து ஏய்ப்பையும்
கற்றுவிடாதே -அது
உன் அறிவுக்கும் ஒழுக்கத்துக்கும்
ஓர் கரும்புள்ளி

வட்டு.கிழக்கு க.கஜன்

## அன்பு

ஆழ்கடலில் பிறவாச் சொத்து
அன்பெனும் முத்து
நீள் புவியில் மானிடர்க்கு
நிலையான சொத்து

## தமிழ்

தமிழுக்கு அமுதென்று பெயர்
அந்தத் தமிழ் எம் சொந்தத் தமிழ்
அமிழ்தினும் இனியசுந்தரத்தமிழ்
தேன்சிந்தும் தமிழ் எங்கள் தமிழ்

## காலக் கவிஞன்

குப்பி விளக்கில் படித்து-நானும்
குருவானவன்- உள்ளம்
குன்றியிருந்த உணர்வினாலே
அறிஞன் ஆனவன்

## நட்பு

தேடியும் கண்டுபிடிக்க முடியாத
தேசத்துக்கு போன பின்னும்
நினைவுகளின் நம்பிக்கையில்
சுவாசங்கள் தூக்கமிழந்து
காத்திருப்பது பள்ளிக்கால
நட்பில்தான்

## சாதனை

பெற்றிடும் தோல்விகளை
உன் மூச்சுக் காற்றாய்
நீ எடுத்தால்
சாதனைவானில் நீயே
சாதனையாளன்

பா.மதனபாரதி

## முக்கோண விமானங்கள்

எதிர்காலத்தில் முக்கோண வடிவத்தில் பயணிகள் விமானத்தை நாசா அறிமுகம் செய்யவுள்ளது. எக்ஸ்-48 சி என்ற மொடல் விமானத்தை அது தயாரித்துள்ளது.

இதன் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாகவும் இதுவே எதிர்வரும் 20 ஆண்டுகளில் ஆதிக்கம் செலுத்தும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

உளவு விமானத்தை போன்ற இதில் யன்னலோர இருக்கைகள் இருக்காது. மாறாக அதிக இருக்கைகள் மற்றும் அதிக எரிபொருள் திறன் கொண்டதாக இருக்கும் என்பதுடன், அதிக பயணிகளை ஏற்றக்கூடியதாகவும், அதி வேகமாக செல்லக்கூடியதாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கைதடி நவீல்ட் .......

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவர், சமாசம் சமூக நலன்சார்ந்த அபிவிருத்தி நலத் திட்டங்களுக்கு செய்துவரும் உதவிகளை பாராட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன், சமாசத்தின் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம், சமாசப் பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நவீல்ட் பாடசாலை மாணவர்களின் அபிநய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

சமாசத்தால் வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்களின்மூலம் மாணவர்களுக்கு சுலபமாக உணவு பரிமாறக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக அதில் கலந்துகொண்ட பலரும் கருத்து தெரிவித்தனர்

## 90வது சர்வதேசு .....

1ம் பக்கத் தொடர்ச்சி

திரு இ.இராஜாராம், கூ.அ.திணைக்கள தலைமை அலுவலர் திரு இ.விஜயமோகனராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், சமாசப் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி . குணரத்தினம், கூ.அ.அலுவலர் திரு க.கமலநாதன், வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாளர் திரு க.சுதாகரன், சமாதான நீதவான் திரு கி.சின்னத்துரை, சுன்னாகம், சங்கானை, தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், க.பொ.த. (சா/த)பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகளும், கல்விக் கொடையும், பாடசாலை உபகரணங்களும், சிறுவர் சேமிப்பாளருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், 40 வருட சேவையாளர்கள் கௌரவிப்பும், முன்னாள் தலைவர் கௌரவிப்பும், சிறந்த அங்கத்தவர்கள், சிறந்த பணியாளர்கள் ஆகியோர் கௌரவிப்பும், கூட்டுறவு தின விழாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

## மத்திய வங்கி.....

1ம் பக்கத் தொடர்ச்சி

அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலடைப்புத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து நேரடியாக இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியதோடு, உற்பத்திகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் பனை தென்னை வள சங்கங்கள் மத்திய வங்கியின் வடமாகாண பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

## பனை தென்னை....

3ம் பக்கத் தொடர்ச்சி

உலக தரத்துக்கு ஏற்ப உற்பத்தி செய்தல், பதனிடுதல், பாதுகாத்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றில் அதி நவீன தொழில்நுட்பங்களை உட்புகுத்தி செயற்படுவதை எதிர்கால இலக்காக வரித்துக் கொண்டு செயற்பட முயற்சித்தால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் பல நூறு ஆண்டுகள் நிலைத்து நின்று, எதிர்நோக்கும் அத்தனை சவால்களையும் முறியடித்து, ஒரு சுபீட்சமான நிறுவனமாக நாட்டின் அபிவிருத்திக்கு துணை நிற்கும் அமைப்பாக மிளிரும், துலங்கும் என்பது மறுக்கப்படமுடியாத ஒன்று எனத் துணிந்து கூறமுடியும்.

## வேண்டாம்! பகிடிவதை

பாடசாலையிலே ஒழுக்கமாகவும்
படிப்பினிலே ஆர்வமுடனும்
படித்து முன்னுக்கு வந்த
முதன்மை மாணவர்களே!
பல்கலைக்கழகம் சென்றதுமே
இந்த ஒழுக்கத்தை ஏன் இழந்தீர்?
பாழ்பட்ட கலாச்சார சீரழிவை
பல்கலைக்கழகத்திலே
பகிடிவதை என்ற பண்பில்லா காரியத்தை
சக மாணவரில் ஏன் காட்டுகின்றீர்?
பாவம் அந்த உள்ளங்கள்!
கஸ்ரப்பட்டு படித்து முன்வந்தவர்கள்
பல்கலைக்கழகத்திலே பட்டம்
பலபெற்று பாடசாலையிலே
கற்பிக்க வரும்போது...
உங்களிடம் கல்வி கற்கலாமா?
நீங்கள் பகிடிவதை செய்த காலத்தினை
பின்நோக்கிப் பார்!
உன் மகனோ, மகளோ படித்து
பட்டம்பெறப்போகும் பல்கலைக்கழகத்தில்
பகிடி வதைக்கு ஆளாகினால்
உங்கள் மனவேதனை எப்படியிருக்கும்?
குருவான நீங்கள் இனிவரும் சந்ததிக்கு
பகிடிவதை வேண்டாம் என்றே
கற்பியுங்கள்! கோப்பாய் எஸ்.ராசா

## மீன் சாப்பிடுங்கள்

அசைவ உணவு வகைகளில் அதிக சத்து நிறைந்தது மீன் என்று உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இதில் உள்ள ஒமேகா கொழுப்பு அமிலங்கள் மூளையின் வளர்ச்சிக்கு ஏற்றது. சல்மான், டூனா வகை மீன்களில் அதிக அளவில் ஒமேகா கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன.

மீனைப்போல, முட்டையிலும் ஒமேகா கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இவை மூளையின் செல்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். இதில் உள்ள உயர்தர புரதம், விற்றமின் இ போன்றவை மூளைக்கு தேவையான அளவு ஊட்டச்சத்தினை தருகின்றன.

## பாதாம் பருப்பு

பாதாம் பருப்பில் உயர்தர அன்டி ஒட்சிசன் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் அடங்கியுள்ளன. தினசரி நான்கு பாதாம் பருப்பு சாப்பிடுவதன் மூலம் உடலுக்குத் தேவையான கலோரிகள் கிடைப்பதோடு, மூளையும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

## மஞ்சளும் அழகும்

மஞ்சளை அதன் இலையோடு சேர்த்து பாசிப் பயிறு மாவோடு கலந்து தினமும் உடலில் பூசிக் குளித்தால் சுருக்கம் நீங்கும். மஞ்சள் இலை மற்றும் குப்பைமேனி இலை இரண்டையும் அரைத்து குளித்த பிறகு, உடலில் பூசிக் கழுவுவதை தினமும் செய்தால் பூனை முடிகள் உதிரும். குழுத்து, கணுக்கால்களில் கருமையைப் போக்க மஞ்சள் தூளை தயிரில் கலந்து தடவி வரவும்.

மஞ்சளுடன் வேப்பிலையை அரைத்துப் பூசி பின்பு குளிர் நீரில் கழுவினால் முகப்பருவில் சீழ் பிடிக்காது. முகத்தோல் சொரசொரப்பாக இருந்தால், மஞ்சளோடு துளசியை அரைத்துப் பூசிவரவும். மஞ்சள் கிழங்கு ஒன்றுடன் ஒரு எலுமிச்சை இலையை சேர்த்தரைத்துப் பூசினால் முகம் பளிச்சென்று மாறும். மஞ்சளை அரைத்துப் பூசத் தேவையில்லை. மஞ்சள் கலந்த நீராவிகூட அழகைக் கூட்டும். குண்டு மஞ்சள் கிழங்கு, கெட்டிக் கிழங்கு முக அழகைக் கூட்டி, அதிக நிறம் கொடுக்கும்.

## சமாசத்தால் நடத்தப்படும் சர்வதேச கூட்டுறவுதினமும், கௌரவிப்பு விழாவும்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 90வது சர்வதேச கூட்டுறவுதின விழாவும், கௌரவிப்பு விழாவும் 30-10-2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளுக்கு வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலாளர் செல்வி க.பிரபா, யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன், மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு இ.இராஜாராம், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு எஸ்.பத்மநாதன், மாவட்ட கூட்டுறவு அலுவலர் திரு இ.பாலச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள தலைமைக் காரியாலயப் பரிசோதகர்கள் திரு இ.விஜயமோகனராஜா, திரு தி.வித்தககலாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில், 2011ம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர், பணியாளர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், 2011ம் ஆண்டு உயர் கல்வி வாய்ப்பைப் பெற்ற மாணவர்கள், சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் ஆகியோருக்கான கௌரவிப்புக்களும், 2011ம் ஆண்டுக்கான சிறந்த சங்கங்கள் மற்றும் கொத்தணிகள் ஆகியவற்றுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

### கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு பயிற்சி

கடந்த 11.10.2012ல் சமாச மண்டபத்தில் நடைபெற்ற கல்வி உத்தியோகத்தர் மாதாந்த மாநாட்டில், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பணியாளர்களுக்கான பயிற்சியும், சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கிளை முகாமையாளர்களுக்கான பயிற்சியும் நடத்தப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டதுடன், இப்பணியாளர்களுக்கான பயிற்சி நெறியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நடைமுறை விதி தொடர்பான பயிற்சி வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### புதிய கிளைப் பணியாளர்களுக்கான பயிற்சி

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையும், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து 29.10.2012ல் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபைச் செயலாளர் தலைமையில் காலை 10.30 மணிக்கு பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இப்பயிற்சி நெறியில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக இணைந்துகொண்ட கிளைப் பணியாளர்கள் அனைவரும் பயிற்சியாளர்களாக கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விரிவுரைகளை யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி திரு கிருபாகரன் அவர்கள் ''மதுவரிச் சட்டங்களும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும்'' என்ற தலைப்பிலும், சமாசக் கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார் ''பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆரம்ப நிலையும் தற்போதைய வளர்ச்சியும்'' மற்றும் ''கிளை முகாமையாளர்களின் கடமையும் பொறுப்புக்களும்'' என்ற தலைப்புக்களிலும், திரு வீ.கே. சிவராசசுந்தரம் அவர்கள், ''கிளைப் படிவங்களும் கணக்கு வைப்பு முறைகளும்'' என்னும் தலைப்பிலும் விரிவுரையாற்றவுள்ளனர்.


எமது சங்கம் பனை வளத்தினைப் பயன்படுத்தி பல்வேறு வகையான உற்பத்திகளை மேற்கொண்டு விற்பனை செய்து பொருளாதார அபிவிருத்தியில்புதிய பாதையைத் திறந்துள்ளது

எமது உற்பத்தி, வியாபாரச் செயற்பாடுகள்
தரமான கள் விற்பனை
போத்தற் கள் உற்பத்தி
பனந்தும்பு உற்பத்தி
சுவையுணவு விற்பனை

பாம் கோப் சிற்றி
பனைவெல்லம்,
பனங்கற்கண்டு,
புளுக்கொடியல், ஒடியல் மா,
பாய், கடகம், தொப்பி

சேமிப்புத் திட்டம்
அங்கத்தவர்,
பணியாளர்களுக்கு
கடன் வழங்கல்.

வாடகைச் சேவை
அங்கத்தவர், பணியாளர் அல்லாதோர்க்கும் அவர்களின் வைபவங்களுக்கு சலுகை அடிப்படையில் தகரப்பந்தல், பிளாஸ்ரிக் கதிரை, நீர்த்தாங்கிகளை வாடகைக்கு வழங்குதல்.

சுற்றுலாப் பயணிகளுக்கு
நீராடல், மலசலகூட
வசதிகள்.

வேலணை பனை தென்னை வள அ.கூ. சங்கம்
1ம் வட்டாரம், வேலணை கிழக்கு. தொ.பே. 0213210083


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டது.